1971 டிசம்பர் 13]

மீன்பிடிக்கும் காலங்கள், மீன்பிடிப் பகுதிகள் முதலியவற்றைக் கண்டுபிடிக்க, கடலுக்கருகிலுள்ள நீரை ஆய்வு செய்ய சென்னையில் ஆய்வு—அண்மைக்கடல் மீன்பிடி நிலையத்தைத் தொடங்குதல்.

இவை போன்ற பல திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, குளச்சல் போன்ற மீன் தாராளமாகக் கிடைக்கின்றப் பகுதிகளை இந்த சிறப்புத் திட்டத்தில் ஒன்றாக எடுத்துக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதற்கும் திட்டங்கள் இருக்கின்றன.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டின் கடற்கரையோரங்களில், வெளிநாட்டார் அதிகமாக விரும்பி உண்ணுகின்ற சென்னாக்குன்னி, நண்டு, கடல்பாசிகள் கிடைக்கின்றன. அவைகளை நல்லமுறையில் பக்குவப்படுத்தி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் ஏதாவது அரசாங்கத்திடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அரசுத் துறை மூலமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் எதுவும் இல்லை. ஆனால் தனியார்கள் அப்படிப்பட்ட மீன்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், நமது அரசாங்கத்தினால் கொடுக்கப்படுகிற மெகனேஸ்டு எஞ்சின்கள் பொருத்தப்பட்ட போட்டுகள் பழுதடைந்து, இயங்காமல் கிடக்கின்றன. அவைகளை ரிப்பேர் செய்வதற்கு ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பதில்லை. அது ஏன் என்று அரசாங்கம் ஆராய்ச்சி செய்ததா? அதுபற்றி நடவடிக்கை எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆராய்ச்சியும் செய்துகொண்டிருக்கிறது.

கோணப்பராயன்குளம் அரிசனங்களுக்கு குடிநீர் கிணறு

*** 312 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், கோணப்பராயன்குளம் கிராம தாழ்த்தப்பட்ட மக்கள் நீண்டகாலமாக குடிநீர் கிணறு இல்லாமல் சிரமப்படுவது பற்றி பொதுமக்களால் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) ஆம். சென்ற 1970-ம் ஆண்டு குளித்தலை வட்டம், கோணப்பாயன்குளம் கிராமத்து அரிசன பொதுமக்கள் அக்கிராமத்திற்கு குடிநீர் தேவை என்று திருச்சிராப்பள்ளி மாவட்ட நல அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர். அதன்பேரில் அக்கிராமத்தில் புது குடிநீர் கிணறு தோண்ட ரூ. 4,500-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விரைவில் வேலையை முடிக்க மாவட்ட ஆட்சித் தலைவரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிச்சைக்காரர் மறுவாழ்வு

***313 வினு—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ், கோவையில் ஓர் மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு பணம் திரட்டியதில், தமிழ்நாட்டிலே அதிகமாக—ஒன்பது லட்ச ரூபாய்—வசூலித்துத் தந்த கோவை மாவட்டத்தில் ஒரு பிச்சைக்காரர் மறுவாழ்வு விடுதித் திறக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஏற்கெனவே கோவையில் ஒரு பிச்சைக்காரர் மறுவாழ்வு விடுதி நகராட்சியால் நடத்தப்பட்டு வருகிறது. எனவே மீண்டும் அங்கு ஒரு விடுதியை ஏற்படுத்தும் செயற்குறிப்பு இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வளிப்பதற்காக நமது மாநிலத்தில் திட்டம் வகுக்கப்பட்டு, நிதி வசூலிக்கப்பட்டு, ஆக்கவேலைகள் நடைபெற்று வருகின்றன. இதைப்போல இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கு நிதி வசூலிக்கப்பட்டு, இப்படிப்பட்டத் திட்டம் செயல்படுகிறதா ? இதைச் சுட்டிக்காட்டி மத்திய அரசாங்கத்திடம் ஏதாவது பணம் பெற அரசாங்கம் முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : வேறு எந்த மாநிலத்திலும் இப்படிப்பட்டத் திட்டம் செயல்பட்டு வருகிறதா என்பது குறித்துத் தகவல் இருப்பதாகத் தெரியவில்லை. மத்திய அரசாங்கத்தில் நிதி பெறும் கோரிக்கை எதுவும் எழவில்லை.